# சதிவலைப் பின்னல்-2

சேரமான்

(பகுதி 3)



**முழு உலகமும் கணினிப் புரட்சிக்குள் திளைக்கத் தொடங்க, 2000 ஆம் ஆண்டு பிறந்த பொழுது குப்பி விளக்கின் வெளிச்சத்திலேயே தமிழீழ மாணவர்களின் கல்விக் காலம் கழிந்து கொண்டிருந்தது.**

பனிப்போருக்குப் பின்னர் ஏற்பட்ட உலக ஒழுங்கு தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை எவ்வாறான நெருக்கடிக்குள் இட்டுச்சென்றது என்பதைக் கடந்த தொடரில் ஆராய்ந்திருந்தோம். இதன் தொடர்ச்சியாக ஈழத்தீவில் சமாதானத்தின் பாதுகாவலர்களாகக் களமிறங்கிய மேற்குலக சக்திகள், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிங்கள அரசுக்கு இடையில் போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஈழப் பிரச்சினையில் எவ்வாறான அணுகுமுறையைக் கையாண்டன என்பதை இக்கட்டுரையின் மூன்றாவது பகுதி ஆராய்கின்றது.

சோவியத் ஒன்றியமும், அமெரிக்காவும் ஆதிக்கம் செலுத்திய இரு துருவ உலக ஒழுங்கு பனிப்போரின் முடிவுடன் நிறைவுக்கு வந்தபொழுது, பல்துருவ நிலைக்கு உலக ஒழுங்கு இட்டுச்செல்லப்படும் என்று பன்னாட்டு அரசறிவியலாளர்கள் சிலர் எதிர்வுகூறியிருந்த பொழுதும், தனது மேலாதிக்கத்திற்கு உட்பட்ட ஒரு துருவ – தாராண்மைத்துவ உலக ஒழுங்கை நிறுவிக் கொள்வதில் அமெரிக்கா முழுமூச்சுடன் களமிறங்கத் தவறவில்லை. இதன் பிரதிபலிப்பாகவும், இருபத்தோராம் நூற்றாண்டு எதிர்நோக்கப் போகும் அடுத்தக்கட்டப் பரிமாணப் போர்களுக்கான ஒத்திகைக் களமாகவும் பனிப்போரின் முடிவைத் தொடர்ந்து நிகழ்ந்தேறிய வளைகுடா யுத்தம் அமைந்திருந்தது.

ஒருபுறம் ஆயுதவழி தழுவிய தேசிய விடுதலைப் போராட்டங்களை நெருக்கடிக்குள் இட்டுச்செல்லும் புறநிலையை பனிப்போருக்குப் பின்னர் ஏற்பட்ட உலக ஒழுங்கு உருவகித்திருந்த பொழுதும், மூன்றாம் உலகிலும், சோவியத் ஒன்றியத்திலிருந்து சிதறுண்ட நாடுகளிலும் வெடித்து உக்கிரமடைந்த தேசிய விடுதலைப் போராட்டங்களை மேலெழுந்தவாரியாகக் கட்டுப்படுத்தும் வலிமையைப் அக்காலகட்டத்தில் புதிய உலக ஒழுங்கு கொண்டிருக்கவில்லை. இதனை நன்கு புரிந்து கொண்ட மேற்குலகமும், அதன் தாராண்மைத்துவ விழுமியங்களின் பாதுகாவலான விளங்கும் ஐக்கிய நாடுகள் சபையும், மிகவும் நுண்ணியமான முறையில் தமது நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்து, மூன்றாம் உலக நாடுகளில் அவற்றை செயற்படுத்தத் தொடங்கியிருந்தன.

பனிப்போர்க் காலப்பகுதியில் ஓரளவுக்கு அரசுசார அமைப்புக்களாக இயங்கிவந்த பன்னாட்டுத் தன்னார்வ நிறுவனங்கள், பனிப்போரின் முடிவுடன் மேற்குலக சக்திகளின் ஏவலாளிகளாகிய மாற்றம்பெற்றிருந்தன. 'மனிதநேயப் பணி' என்ற முகமூடி தரித்து மூன்றாம் உலக நாடுகளில் வகைதொகையின்றிக் களமிறங்கிய இவ்வாறான பன்னாட்டுத் தன்னார்வ நிறுவனங்கள், அந்தந்த நாடுகளின் அரசியலமைப்புக்களையும், ஆட்சிப் பொறிமுறைகளையும், பொருண்மியத் தளத்தையும் தாராண்மைத்துவ உலக ஒழுங்கிற்கு இசைவாக மாற்றியமைப்பதையே தமது முதன்மை நிகழ்ச்சித் திட்டமாகக் கொண்டிருந்தன.

இதில் குறிப்பாக நீண்டகால யுத்தத்தால் பெருமளவில் உட்கட்டுமாண சிதைவுகளுக்கும், அழிவுகளுக்கும் ஆளாகியிருந்த தேசிய இனங்களையும், அரசுகளையும் குறிவைத்தே இவ்வாறான பன்னாட்டுத் தன்னார்வ நிறுவனங்களை மேற்குலகம் களமிறக்கியிருந்ததோடு, இவற்றுக்கு தாராளமாக நிதிவளத்தையும் அள்ளிக்கொடுத்தமை இங்கு கவனிக்கத்தக்கது.

ஈழப்பிரச்சினையைப் பொறுத்தவரை, ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்ற யுத்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர் புரிவதை விட தமிழீழ தேசத்தின் உட்கட்டுமாணங்களை சிதைப்பதையும், தமிழீழ மக்களை சொல்லொணாத் துயரத்திற்கும், அவலத்திற்கு ஆளாக்குவதையும் குறியாகக் கொண்டு தமிழின அழித்தொழிப்புப் போரை சிங்கள அரசு முன்னெடுத்திருந்தது. தமிழீழ மக்களின் வாழ்விடங்கள் மீதான திட்டமிட்ட வான்வழித் தாக்குதல்கள், பீரங்கிக் கணை வீச்சுக்கள், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள், பொருண்மியத் தடை எனப் பல்வேறு வடிவங்களில் சிங்கள அரசு முன்னெடுத்த யுத்தம் என்பது அப்பொழுது தமிழீழ தேசத்தை ஏறத்தாழ கற்கால நிலைக்குள் இட்டுச்சென்றிருந்தது. முழு உலகமும் கணினிப் புரட்சிக்குள் திளைக்கத் தொடங்க, 2000 ஆம் ஆண்டு பிறந்த பொழுது குப்பி விளக்கின் வெளிச்சத்திலேயே தமிழீழ மாணவர்களின் கல்விக் காலம் கழிந்து கொண்டிருந்தது.

இப்படியான சூழலில் 2002 ஆம் ஆண்டு நோர்வேயின் அனுசரணையுடன் ஏற்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கை என்பது, யுத்தத்தால் அழிந்தும், சிதைந்தும் காணப்பட்ட தமிழீழ தேசத்தின் உட்கட்டுமாணங்களைக் கட்டியெழுப்புவதற்கும், தமிழீழ மக்களின் வாழ்வில் இயல்புநிலையை ஏற்படுத்துவதற்கும் மிகச்சிறந்ததொரு வாய்ப்பாக அமைந்திருந்தது எனக்கூறின் அது மிகையில்லை. சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட பிரதேசங்களில் கண்ணிவெடிகளை அகற்றுதல், இடம்பெயர்ந்த மக்களை சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துதல், சிங்கள அரசின் கொடிய பொருண்மியத் தடையால் சிதைந்து போயிருந்த தமிழீழ மக்களின் பொருண்மியத்தை மீளக்கட்டியெழுப்புதல், வீதிகள், குடிமனைகள், பாடசாலைகள், மருத்துவமனைகள் போன்ற மக்களின் அடிப்படை உட்கட்டுமாணங்களை நிர்மாணித்தல், இளைய தலைமுறையின் கல்வி வாய்ப்புக்களை இயல்புநிலைக்கு கொண்டுவருதல் என மிகப் பெரும் பணி அன்றைய காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னால் விரிந்திருந்தது.

ஒருபுறம் போர் ஓய்வுக் காலப்பகுதியில் தமது படைவலிமையையும், நிழலரசையும் பேணிப் பாதுகாத்து மக்களுக்கான மனிதநேயப் பணிகளை முன்னெடுத்தவாறு, மறுபுறம் தமிழீழ தேசத்தின் உட்கட்டுமாணங்களை கட்டியெழுப்புவது என்பது தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை மிகப்பெரும் சவாலாகவே அமைந்திருந்தது. எந்தவொரு அந்நிய சக்திகளின் உதவியுமின்றி, முற்றுமுழுதாக புலம்பெயர்வாழ் தமிழீழ மக்களின் நிதி மூலதனத்தை மட்டும் நம்பியிருந்தவாறு இவ்வாறான தேசிய உட்கட்டுமாண மீளமைப்புப் பணிகளை தன்னிறைவாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொள்வது என்பது சாத்தியமானதாக அமையவில்லை.

இதனை நன்கு புரிந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள், உலக சமூகத்திற்கு நேசக்கரம் நீட்டி தமிழீழ மக்களின் வாழ்வில் இயல்புநிலையை ஏற்படுத்துவதற்கான பணிகளை சகல வழிகளிலும் முன்னெடுத்தார்கள். போர்க் காலத்தில் மக்களுக்காக தமது இன்னுயிரை ஈகம்செய்த தமிழீழ விடுதலைப் புலிகள், போர் ஓய்வுக்காலப் பகுதியில் அதே மக்களின் நல்வாழ்வுக்காகத் தமது பொறுமையை அர்ப்பணம் செய்தார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் நினைத்திருந்தால் போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட ஆறு மாதத்திற்குள்ளேயே மீண்டும் போரைத் தொடங்கியிருக்க முடியும். ஏன், 2003 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும், நடுப்பகுதியிலும் பன்னாட்டு கடற்பரப்பில் தமது வணிகக் கப்பல்களை சிங்களக் கடற்படையினர் தாக்கியழித்த பொழுதே யுத்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகளால் தொடங்கியிருக்க முடியும்!

ஆனாலும், மக்களுக்காக தமது பொறுமையை அர்ப்பணம்செய்து, மக்களின் வாழ்வில் இயல்புநிலையை தோற்றுவிப்பதற்காகத் தம்மால் இயலுமான சகல வழிகளிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் முற்பட்டார்கள்.

ஒருபுறம் போர்நிறுத்தக் கண்காணிப்பு, வீதி அபிவிருத்தி, கண்ணிவெடியகற்றுதல், புனர்வாழ்வு, மருத்துவ உதவி என்ற போர்வையில் தமிழீழ மண்ணில் ஊடுருவிய பன்னாட்டு ஒற்றர்களுக்கு முகம் கொடுத்தவாறு, மறுபுறம் சிங்கள அரசின் நாசகார நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்கொண்டமை என்பது சாதாரண விடயமல்ல.

அபிவிருத்திப் பணிக்கான திட்டங்கள் என்ற போர்வையில் தமிழீழ தாயகத்தில் களமிறங்கிய ஒவ்வொரு பன்னாட்டு தன்னார்வ நிறுவனமும், மேற்குலகின் தாராண்மைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதிலேயே குறியாக இருந்தன. நம்பகத்தன்மை, வெளிப்படைத்தன்மை, சனநாயகத்துவம் என்ற கோசங்களுடன் தமிழீழ மக்களுக்கு இவ்வாறான தன்னார்வ நிறுவனங்கள் இழைத்த துரோகங்கள் எண்ணிலடங்காதவை.

தமிழீழ மக்களுக்கு தேவையான சகல மனிதநேய ? அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுப்பதற்கான ஆற்றலையும், கட்டமைப்புக்களையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கொண்டிருந்த பொழுதும், ஓரிரு உப அமைப்புக்களைத் தவிர தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆளுகைக்கு உட்பட்ட தன்னார்வ நிறுவனங்கள் ஊடாக அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதை திட்டமிட்டு பன்னாட்டு தன்னார்வ நிறுவனங்களும், மேற்குலக அரசுகளும் தவிர்த்தே வந்திருந்தன. இவ்வாறான ஓரங்கட்டும் நடவடிக்கைகளில் இருந்து விதிவிலக்கு வழங்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் உப அமைப்புக்கள்கூட சிறீலங்கா அரசால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களாக இருக்க வேண்டும் என்பதில் தாராண்மைத்துவ உலகம் உறுதியாக இருந்தது.

தமிழீழ மண்ணில் நிழலரசு ஒன்றைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்குவதை ஒருபுறம் தாராண்மைத்துவ உலகம் ஒப்புக்கொண்ட பொழுதும், இதனை சிறீலங்காவின் இறையாண்மைக்கு உட்பட்ட ஒரு தற்காலிக மாநில அரசு என்ற கோணத்திலேயே தாராண்மைத்துவ உலகு அணுக முற்பட்டது. உதட்டளவில் பேச்சுவார்த்தை அரங்கில் தமிழீழ விடுதலைப் புலிகளை சமதரப்பாக தாராண்மைத்துவ உலகு அங்கீகரித்த பொழுதும், படைவலுச் சமநிலையை சிங்கள அரசுக்கு சாதகமாகத் திருப்பி, தமிழீழ விடுதலைப் புலிகளை நிராயுதபாணி நிலைக்கு இட்டுச் செல்லும் தமது நிகழ்ச்சித் திட்டத்தில் இந்திய ஏகாதிபத்தியமும் சரி, தாராண்மைத்துவ மேற்குலகமும் சரி குறியாகவே இருந்தன.

2003ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் வோசிங்டனிலும், அதனைத் தொடர்ந்து ரோக்கியோவிலும் நிகழ்ந்தேறிய கொடையாளி நாடுகளின் மாநாட்டில் அமெரிக்கா கையாண்ட அணுகுமுறை இதற்குத் தெளிவான சான்றுபகர்ன்றது.

(தொடரும்)